2022 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் இதுகுறித்துச் சொன்னேன். அதாவது, தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை, அரசாணை எண் 330—ல் இதுசம்பந்தமாக அரசு அறிவித்தது. அது தொடர்ந்து இப்போது ஆய்வில் இருக்கிறது.* Meeting *முடிந்து,* preliminary notification *கொடுத்திருக்கிறார்கள். ஆய்வு முடிந்து அந்தக் குழு என்ன அறிவிக்கின்றதோ, அந்தச் சம்பளத்தைக் கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

மண்ணெண்ணெய் விநியோகம்

***14324—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கவும், அதன் விலையைக் குறைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய பதிலை பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.*

தற்போது நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெற்று வரக்கூடிய 2 கோடியே 18 இலட்சத்து 19 ஆயிரத்து 223 குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 10 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்க 2 இலட்சத்து 18 ஆயிரத்து 192 கிலோ லிட்டர் தேவைப்படும். ஆனால், ஒன்றிய அரசால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் 2006 ஏப்ரல் திங்களில் 59 ஆயிரத்து 852 கிலோ லிட்டராக இருந்த நிலையில், இந்த ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது மாதாந்திர ஒதுக்கீடு 7,536 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. ஆதலால்,

ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதந்தோறும் 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க இயலாத நிலையுள்ளது. அதேபோன்று, தற்போது 1 லிட்டர் மண்ணெண்ணெய் குறைந்தபட்சம் ரூ.15/–, அதிகபட்சம் ரூ.16.30 என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்யை 44 ரூபாய் 27 காசு விலை கொடுத்து மாநில அரசு பெறுகிறது. ஏற்கெனவே அதிக அளவு மானியத்துடன் மாநில அரசால் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேலும் விலையைக் குறைக்க வேண்டிய நிலை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினரால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆரம்பத்தில், குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் 10 லிட்டரும், சென்னையில் 12 லிட்டரும், மற்ற கிராமப்புறங்களில் 5 லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்பட்டு வந்தது. சில வருடங்களுக்கு முன்பு இலவச Gas இணைப்பு வழங்கப்படும் என்ற திட்டத்தின்கீழ் gas cylinder வாங்கியவர்களுக்கு மண்ணெண்ணெய் அளவு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, ஒன்றிய அரசினால் ஒதுக்கப்படுகின்ற மண்ணெண்ணெய் அளவு குறைக்கப்பட்டு தற்போது 1 லிட்டர், அரை லிட்டர் என்று திருச்சி கிழக்குத் தொகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பாக gas connection இல்லாதவர்களுக்கும், ஒரு gas cylinder வைத்திருப்பவர்களுக்கும் மண்ணெண்ணெய் ஒரு லிட்டர், அரை லிட்டர் என்றும், 2 gas cylinder வைத்திருப்பவர்களுக்கு மண்ணெண்ணெய் அறவே கிடையாது என்ற வரைமுறை வகுக்கப்பட்டு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதி நகர்ப்புற பகுதியாக இருந்தாலும் குடிசைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி என்பதால் gas அடுப்பையும், விறகு அடுப்பையும், மக்கள் உபயோகப்படுத்துகிறார்கள். எனவே, அவர்களுக்கு மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரைக் கேட்டால், நமக்குத் தேவையான அளவைவிட 25 சதவிகிதம் குறைவாகத்தான் நமக்கு ஒன்றிய அரசினால் ஒதுக்கீடு

செய்யப்படுகிறது என்று கூறுகிறார். ** இலவச gas connection கொடுக்கப்பட்டபோது gas cylinder–னுடைய விலை என்ன? இன்றைக்கு gas cylinder–னுடைய விலை என்ன? இன்றைய விலை ரூ.970/–. அதேபோல gas cylinder–ஐ வாங்கினால் ஒன்றிய அரசினால் தரப்படுகின்ற மானியம் உங்கள் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று சொன்னார்கள். சிறிது காலம் வங்கிக் கணக்கில் செலுத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வந்துவிடுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: அதுதான், விலை குறித்த கேள்விதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன விலை என்று சொல்லுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: கடந்த ஒரு வருட காலமாக முறையாக credit செய்யப்படவில்லை. முழு விலை கொடுத்துதான் cylinder வாங்க வேண்டிய சூழ்நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநில அரசிடம் என்ன கேட்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: எப்போது gas cylinder விலை ஏறுமென்றே தெரியவில்லை. Credit ஏன் வழங்கப்படவில்லை என்பது குறித்த அறிவிப்பும் வெளியாகவில்லை. எனவே, ரூ.1,000/– கொடுத்து எங்களால் gas cylinder வாங்க முடியவில்லை என்று சொல்கின்ற மக்களுக்கு ஒன்றிய அரசின் சார்பாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வாங்கித் தர முடியுமா என்ற கேள்வியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் தங்களின் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. ** என்ற பதம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண்ணெண்ணெய்யை எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, 2006 ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மண்ணெண்ணெய்யின் அளவு 59,852 கிலோ லிட்டராக இருந்தது. கடந்த பத்தாண்டு காலத்தில் அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இன்றைக்கு 7,536 கிலோ லிட்டராக ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் மண்ணெண்ணெய்யின் அளவை அவர்கள் குறைத்துவிட்ட காரணத்தினால், இன்றைக்கு மக்களுக்கு வழங்க முடியவில்லை. குறிப்பாக, முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கும், இரண்டு சிலிண்டர்கள் வைத்திருப்பவர்களுக்கும் மண்ணெண்ணெய் கொடுப்பதில்லை. அதுமட்டுமல்ல, No commodities அதாவது, எந்தப் பொருளும் வேண்டாமென்று சொல்கிறவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மாநகராட்சிகள் மற்றும் மாவட்டத் தலைமையிடங்களில், 2006 ஆம் ஆண்டு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. நகராட்சிப் பகுதிகளில் 6 லிட்டரும், நகரியம் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளில் 5 லிட்டரும், கிராமப் பஞ்சாயத்துகளில் 3 லிட்டரும், மலைப் பகுதிகளில் மற்றும் மாவட்ட தலைமையிடத்தில் 15 லிட்டரும், நகரியம் மற்றும் பேரூராட்சியில் 10 லிட்டரும், கிராமப் பஞ்சாயத்துகளில் 10 லிட்டரும் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் அளவு எரிவாயு இணைப்பில்லாத அட்டைதாரர்களுக்கு அதிகபட்சமாக 3 லிட்டரும், ஓர் எரிவாயு இணைப்பு உள்ள அட்டைதாரர்களுக்கு அதிகபட்சமாக 1 லிட்டரும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஒன்றிய அரசிடம் சொல்லி, கூடுதலான மண்ணெண்ணெய்யை பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

2006–2011 ஆம் ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அன்றைக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சராக இருந்தவரும், இன்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சராகவும் இருக்கின்ற மரியாதைக்குரிய அண்ணன் மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்கள், மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு—

2022 ஜனவரி 7]

அன்றைக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இருந்தது. அப்போது, டெல்லியில் இருந்த மாண்புமிகு பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. முரளி தியோரா அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டுக்கு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், அன்றைக்கு மண்ணெண்ணெய்யின் அளவைக் குறைக்கவில்லை. அந்த ஒதுக்கீட்டை இரண்டு முறை உயர்த்திக் கொடுத்தார்கள். கடந்த பத்தாண்டுக் காலத்தில் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, இன்னும் கூடுதலாக மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைச் சொல்லிவிட்டார். எனவே, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற முயற்சிக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

ஜவுளிப் பூங்கா

***4084—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?